

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (22.8.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டிற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தாய்லாந்து நாட்டு துணைத் தூதர் ரச்சாஅரிபார்க் அவர்கள் (Mr. Racha Aribarg) சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், தாய்லாந்து வர்த்தக மையத்தின் இயக்குநர் செக் ஜினாபன் (Mr. Chek Jeenaphan Director, Thai Trade Center, Commercial Section), தாய்லாந்து நாட்டு தூதரக அலுவலர்கள் பனுடாஜ் ரஸ்மிடத்தா (Mr. Panutaj Rasmidatta), பிங்பாங்க் சவ்வாசடா (Mr. Pinpong Chauvachata) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (22.8.2024) தலைமைச் செயலகத்தில், சென்னையைச் சேர்ந்த பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மாணவன் கனிஷ் சந்தித்து, Puzzle Cubesல் உலக கின்னஸ் சாதனை படைத்தமைக்காக வாழ்த்துப் பெற்றார். உடன் அவரது பெற்றோர் உள்ளனர்.



தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியில்தான் மலை கிராமங்களுக்கும் சாலை வசதி செய்து கொடுக்கப்பட்டது என திண்டுக்கல்லில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பேசியதோடு தமிழகத்தில் உள்ள கிராமங்களில் 10வீடுகள் இருந்தாலும்கூட அந்த கிராமத்திற்கும் முதல்வரின் கிராமப்புற சாலை திட்டம் மூலம் சாலை வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது என பெருமிதமாக கூறினார்.

### இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ஆக 24, 25 தேதிகளில்

# பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு!

## அமைச்சர்கள் பங்கேற்பு – சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு!

சென்னை, ஆக.23-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திண்டுக்கல் மாவட்டம், பழனியில் 2024 ஆகஸ்ட் 24 மற்றும் 25 தேதிகளில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு உலகெங்கும் வாழும் முருகப் பக்தர்கள் போற்றி பாராட்டிடும் வகையில் அறுபடைவீடுகளின் காட்சி அரங்கங்கள், பார்ப்பவர்கள் பரவசமடையும் மெய்நிகர் காட்சிகள், முப்பரிமாணப் பாடலரங்கம், சிறப்புப் புகைப்படக் கண்காட்சி, ஆய்வரங்கங்கள், இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளுடன் வெகு விமரிசையாக நடத்தப்பட உள்ளது.

முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 27.02.2024 அன்று நடைபெற்ற இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் கூட்ட முடிவுகளின்படி, “தமிழ்க் கடவுளான முருகப்பெருமானின் பெருமையை உலகில் உள்ள முருக பக்தர்கள் அறிந்து கொள்ளும் வகையில் அறுபடை வீடுகளில் ஒன்றான பழநியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு 2024 ஆகஸ்ட் 24 மற்றும் 25 ஆகிய தேதிகளில் நடத்தப்படுகிறது. இம்மாநாடு தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் வகையில் இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் தலைமையில் ஆன்மிக பெரியோர்கள் மற்றும் துறை உயர் அலுவலர்கள் உள்ளிட்ட 20 உறுப்பினர்களைக் கொண்ட ஒருங்கிணைப்புக் குழுவும், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் தலைமையில் 11 செயற்பாட்டுக் குழுக்களும் அமைக்கப்பட்டு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இம்மாநாட்டில் இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து பங்கேற்க விரும்பும் முருக பக்தர்கள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்க விரும்பும் பேராளர்கள்/ஆய்வு மாணவர்கள் பதிவு செய்திடும் வகையில் தனி இணையதளம் தொடங்கப்பட்டு இது வரை இந்தியாவிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான நபர்கள் பங்கேற்க பதிவு செய்துள்ளதோடு, 1,003 நபர்கள் ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பித்துள்ளனர்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் தலைமையில் இம்மாநாடு தொடர்பாக 16 ஆய்வுக் கூட்டங் களும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ஆகியோர் பழனியில் மாநாட்டு பணிகளை 4 முறைகளஆய்வும், திண்டுக்கல் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் 2 முறை அனைத்துத் துறை அலுவலர்களின் ஒருங்கிணைப்பு குழு கூட்டமும் நடத்தப்பட்டுள்ளது.

இம்மாநாட்டில் வேல் அரங்கம், அருள்தரும் அறுபடை முருகனின் மூலவர் காட்சிகள், பார்ப்பவர்கள் பரவசமடையும் மெய்நிகர் காட்சிகள், முப்பரிமாணப் பாடலரங்கம், சிறப்புப் புகைப்படக் கண்காட்சி போன்றவை அமைக்கப்படுவதோடு, திருமடங்களின் தலைவர்கள், உலகளவில் சமயப் பெரியோர்கள், அமைச்சர் பெருமக்கள், உயர்நீதிமன்ற நீதியரசர்கள், தமிழ் அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், கலையுலக ஆன்மிக அன்பர்கள், முருகப் பக்தர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

மாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சியானது மங்கள இசையுடன் தொடங்கி, மாநாட்டு கொடியினை தவத்திரு இரத்தினகிரி பாலமுருகனடிமை சுவாமிகள் ஏற்றி வைத்திடவும், சிறப்புக் கண்காட்சியினை ஊராக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, வேல் கோட்டத்தினை திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம் மற்றும் பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி. செந்தில்குமார் ஆகியோர் தொடங்கி வைத்திடவும் உள்ளார்கள். அதனைத் தொடர்ந்து, மாநாட்டின் தொடக்க விழாவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடக்கவுரை ஆற்றவும், தருமபுர ஆதீனம் தவத்திரு தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், திருவண்ணாமலை ஆதீனம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், மதுரை ஆதீனம் தவத்திரு ஹரிஹர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவ ஞான பாலய சுவாமிகள் ஆகியோர் ஆசியுரை வழங்கவும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர்கள் ஆர்.சுப்பிரமணியன், பி.புகழேந்தி, வி.சிவஞானம் ஆகியோர் சிறப்புரையாற்றவும் உள்ளனர். பின்னர், அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டு விழா மலர் மற்றும் ஆய்வு மலர்கள் வெளியிடப்படுகின்றன.

அதனைத் தொடர்ந்து “உலகளாவிய உயர்வேலன்” என்ற தலைப்பில் மலேசியா நாட்டின் தொழில் முனைவோர் மற்றும் கூட்டுறவு துணை அமைச்சர் ஒய்.கி. டத்தோ ரமணன் ராமகிருஷ்ணன், இலங்கை கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் செந்தில் தொண்டைமான், இங்கிலாந்து இப்ஸ்விச் மேயர் இளங்கோ கே.இளவழகன், சுவிட்சர்லாந்து நாட்டை சேர்ந்த ஆறுமுகம் செந்தில்நாதன், ஆஸ்திரேலியா நாட்டை சேர்ந்த டாக்டர் சந்திரிகா சுப்பிரமணியன் ஆகியோர் உரையாற்றிடவும், கலைமாமணி சுகிசிவம் தலைமையில் முருகன் புகழ் வளர்க்கும் முத்தமிழில் “முந்து தமிழ்“ என்ற தலைப்பில் சிந்தனை மேடையும், கலைமாமணி திருமதி சுதா ரகுநாதன் குழுவினர் மற்றும் திருமதி ஊர்மிளா சத்தியநாராயணன் ஆகியோரின் இசைநாட்டிய நிகழ்ச்சிகளும், கருத்தரங்கம் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியினை உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி தொடங்கி வைக்கவும், கோவை கௌமார மடம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள் ஆசியுரை வழங்கவும், முதுமுனைவர் மு.பெ.சத்தியவேல் முருகனார், மொரீசியஸ் தமிழ்க் கோயில்கள் கூட்டிணைப்பின் தலைவர் செங்கண் குமரா ஆகியோர் வாழ்த்துரை வழங்கவும், சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர் ஆர். சுரேஷ்குமார் சிறப்புரையாற்றவும், கலைமாமணி திருமதி தேச மங்கையர்க்கரசி, திருமதி சுசித்ரா பாலசுப்பிரமணியம், இசைப்பேரரசி டாக்டர் நித்யஸ்ரீ மகாதேவன் குழுவினரின் நிகழ்ச்சி, இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. அதனைத் தொடர்ந்து, பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் சுவிட்சர்லாந்தை சேர்ந்த வேலுபிள்ளை கணேஷ்குமார், இங்கிலாந்து துணை மேயர் அப்பு தாமோதரன், இலங்கையை சேர்ந்த ஆறுதிருமுருகன், கவிஞர் இரா. உமாபாரதி ஆகியோரும் உரையாற்றுகின்றனர்.

மாநாட்டின் நிறைவு விழாவில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் பி. வேல்முருகன் தமிழ்க்கடவுள் முருகனின் பெருமைகளை உலகறியும் வகையில் பறைசாற்றிய அடியார்கள், சமயப் பணி புரிந்தோர், சமய சொற்பொழிவாளர்கள், அதிகளவில் திருப்பணி மேற்கொண்டோர், ஆன்மிக மற்றும் இலக்கிய படைப்பாளர்களை சிறப்பிக்கும் வகையில் நக்கீரர், போகர், அருணகிரிநாதர், குமரகுருபரர், பாம்பன் சுவாமிகள். அண்ணாமலை ரெட்டியார், முருகம்மையார், பாலதேவராயர், வாரியார், தேனூர் வரகவி சொக்கலிங்கனார், கச்சியப்பர், பகழிக்கூத்தர், சிதம்பர சுவாமிகள், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், மாம்பழ கவிராயர் என 15 முருகனடியார்களின் பெயரில் விருதுகள் வழங்கி சிறப்பு செய்திட உள்ளார். அதனைத் தொடர்ந்து திருவாவடுதுறை ஆதீனம் தவத்திரு அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் அருளாசியுடன் மாநாட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

இம்மாநாடு இந்து சமய அறநிலையத்துறையின் வரலாற்றில் முத்தாய்ப்பாக அமைவதோடு, தமிழ் கடவுளாம் முருக பெருமானின் பெருமைகளை மென்மேலும் பறைசாற்றி, உலகெங்கும் உள்ள முருக பக்தர்கள் பெருமை கொள்ள செய்யும் வகையில் சிறப்பாக அமைந்திடும்.

# தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழக பொது உறுப்பினர் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கை!

தூத்துக்குடி, ஆக. 23 -

தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க பொது உறுப்பினர் கூட்டம்

நாளை ( 24.08.2024 - சனிக் கிழமை) காலை 10.00 மணியளவில் கலைஞர் அரங்கம், தூத்துக்குடியில் நடைபெறுகிறது.



மாவட்ட அவைத்தலைவர் ஜி.செல்வராஜ் தலைமை வகிக்கிறார்.

கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்கழகச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள், கழக செயல் வீரர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று தவறாது கலந்து கொள்ள அழைக்கிறேன்.

பொருள் :

கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 16.08.2024 அன்று நடைபெற்ற மாவட்ட கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் - குறித்து, கழக வளர்ச்சிப் பணிகள் - குறித்து,

இவ்வாறு அமைச்சர் பி.கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

### ‘சென்னை தினத்தை’ முன்னிட்டு ‘மிளிரும் தமிழ்நாடு’ என்ற தலைப்பின் கீழ்

# ‘சென்னை டூ மெட்ராஸ்’ என்ற புகைப்பட ஓவிய நூல்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெளியிட்டார்!

சென்னை, ஆக.23-

சென்னை தினத்தை முன்னிட்டு, அண்ணா நூற்றாண்டு நூலக கூட்டரங்கில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் சார்பில் பரிசுப் பதிப்புகளாக கொண்டு வரப்பட்டுள்ள ‘மிளிரும் தமிழ்நாடு’ என்ற தலைப்பின் கீழ் ‘சென்னை டூ மெட்ராஸ்’ என்ற புகைப்பட ஓவிய நூலினை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெளியிட்டார்.

2024-2025 ஆம் ஆண்டு பள்ளிக் கல்வித்துறை மானியக் கோரிக்கை அறிவிப்பில் ‘மிளிரும் தமிழ்நாடு’ என்ற தலைப்பில் தமிழ்நாட்டின் பண்பாடு, கட்டடக்கலை, சிற்பக்கலை, நாட்டுப்புறக் கலைகள், தனித்துவமான உணவு வகைகள், புவிசார் குறியீடுகள் போன்றவற்றை உள்ளடக்கிய புகைப்பட ஓவிய நூல்கள் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் “மிளிரும் தமிழ்நாடு” என்ற பெயரில் பரிசுப் பதிப்புகளாக வெளியிடப்படும் எனவும், பல்வேறு புகைப்பட ஓவிய நூல்கள் “மிளிரும் தமிழ்நாடு” என்ற பெயரில் பரிசுப் பதிப்புகளாக கொண்டு வரப்படும் என்று அறிவிக்கப்பட்டது. முதல் கட்டமாக நேற்று (22.08.2024) சென்னை தினத்தை முன்னிட்டு ‘சென்னை டூ மெட்ராஸ்’ (Chennai to Madras) என்ற வரலாற்று பயணமாக புதிய மெட்ராஸ்லிருந்து பழைய மெட்ராஸ் செல்வது போன்ற கருப்பு வெள்ளை நிறம் கொண்ட 280 புகைப்படங்கள் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளது.

புகைப்படங்களோடு மட்டுமல்லாமல் அப்புகைப்படங்களை பற்றிய வரலாற்று முக்கியவத்துவம் வாய்ந்த குறிப்பும் அடங்கியுள்ளது. சென்னையிலுள்ள மிக முக்கியமான அரசு அலுவலக கட்டடங்கள், நீதிமன்ற கட்டடங்கள், பல்கலைக்கழக கட்டடங்கள், வணிக வளாகங்கள் மற்றும் மிகவும் பாரம்பரியம் மிக்க இரயில் நிலையங்கள் இது போன்று பல்வேறு முக்கிய இடங்களை புகைப்படக் கலைஞர் எல்.ராமச்சந்திரன் புகைப்படம் எடுத்துள்ளார், இந்நூலில் என்ன சிறப்பு என்றால் கொரோனா காலகட்டத்தில் ஆட்களே இல்லாத போது அதாவது மிகவும் பரபரப்பாக இருக்கக் கூடிய முக்கிய இடங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் பள்ளிக்கல்வித்துறை செயலாளர், திருமதி சோ.மதுமதி தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், பள்ளிக்கல்வித்துறை இயக்குநர், முனைவர் மு.பழனிச்சாமி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக உறுப்பினர், செயலர் குப்புசாமி, பள்ளிக்கல்வித் துறை இணை இயக்குநர், சங்கர சரவணன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# விளம்பரப் பலகைகள் அகற்றம்!

## சென்னை மாநகராட்சி அறிவிப்பு!

சென்னை, ஆக.23-

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நீதிமன்ற வழக்கு தொடர்புடைய விளம்பரப் பலகைகள் மற்றும் உரிமம் பெறப்பட்ட விளம்பரப் பலகைகளை தவிர இதர அனுமதியில்லாமல் வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகைகளை சம்பந்தப்பட்ட விளம்பர நிறுவனங்கள்/கட்டட உரிமையாளர்கள் அடுத்த 3 தினங்களுக்குள் கட்டுமானத்துடன் அகற்றிடுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியில்லாமல் வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகைகள் மற்றும் பதாகைகளை அகற்றிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நீதிமன்ற வழக்கு தொடர்புடைய விளம்பரப் பலகைகள் மற்றும் உரிமம் பெறப்பட்ட விளம்பரப் பலகைகளை தவிர இதர அனுமதியில்லாமல் வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகைகளை சம்பந்தப்பட்ட விளம்பர நிறுவனங்கள்/கட்டட உரிமையாளர்கள் அடுத்த 3 தினங்களுக்குள் கட்டுமானத்துடன் அகற்றிடுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், ஒரு பெயர்ப்பலகைக்கு மேல் வைக்க வேண்டுமானால் முறையாக அனுமதி பெற்ற பின்பே வைக்கப்பட வேண்டும். எனவே, கூடுதலாக பெயர்ப்பலகை வைத்துள்ள விளம்பர நிறுவனங்கள் 3 தினங்களுக்குள் அவற்றை அகற்றிட வேண்டும்.



தேனி நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. ஆண்டிபட்டி தொகுதிகடமலை மயிலை ஒன்றியங்களில் வாக்களித்த பொதுமக்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார் உடன் மகாராஜன் எம்.எல்.ஏ. கடமலை மயிலை ஒன்றிய செயலாளர்கள் வழக்கறிஞர் சுப்பிரமணியன், தங்கபாண்டியன், மாவட்ட துணை செயலாளர் மலைச்சாமி, செயற்குழு உறுப்பினர் முல்லை, சேகர், ஊராட்சி ஒன்றிய சேர்மன் சித்ரா, சுரேஷ் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### மதுரை மாநகர் மாவட்டக் கழக

# பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

மதுரை, ஆக. 23-

மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மதுரை மாநகர் மாவட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் வருகின்ற 28.08.2024 புதன்கிழமை அன்று காலை 11.00 மணி அளவில் பசுமலை கோபால்சாமி திருமண மண்டபத்தில் அவைத்தலைவர் மா. ஒச்சுபாலு தலைமையில் நடைபெறுகிறது. எனவே மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்டக் கழக செயலாளர்கள், ஒன்றிய, பேரூர், கிளை கழக செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :

கழக முப்பெரும் விழா, கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.





நெல்லை மாநகர மகளிர் அணி, மகளிர் தொண்டரணி சார்பில் நெல்லை பேட்டை பகுதி 16 வார்டு உழவர் சந்தையில் பகுதி செயலாளர் நமச்சிவாயம் தலைமையில் மகளிர் அணி உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று மகளிர் உறுப்பினர் சேர்க்கையை துவக்கி வைத்தார். நிகழ்வில் மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம், மகளிர் அணி அமைப்பாளர் சௌந்தரம் முத்துராஜ், மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மேரி உலகராஜ்,தொண்டரணி தலைவர் பத்மா,மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் பிந்து செய்யது, ஆனிரேக்லண்ட், ஜவகர், லெனின், மாரிமுத்து கேபிள் குமரேசன், அவதார் ஷாஜகான் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.